மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.07/2024
அ.வ.எண்.19/2023

1. பழனிசாமி
2. பாக்கியம்
3. மங்கம்மா
4. ராஜி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. கணேசன்
2. ஜோதிபால் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 01.07.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.கோபிநாத் மற்றும் செல்வி.M.அபிநயா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் வழக்குரையில் திருத்தங்கள் மேற்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்களின் கடுமையான ஆட்சேனையை பொருட்படுத்தாது எதிர்மனுதாரர்களால் மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை அடைத்து சுவர் எழுப்பப்பட்டுள்ளது. சிறிதளவு வழியை மட்டுமே விட்டு, எதிர்மனுதாரர்களால் மனுதாரர்களின் வீட்டிற்கு எதிரே மேற்படி சுற்றுச்சுவர்

அமைக்கப்பட்டுள்ளதால் மனுதாரர்களால் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் மூலம் அவர்களது வீட்டிற்கு செல்ல இயலவில்லை. மேற்படி சுவற்றை அகற்றாவிட்டால் மனுதாரர்களின் நலனுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும் என்பதால், அசல் வழக்கில் மேற்படி சுவற்றை நீக்க உத்தரவிட உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதியளிக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தங்களுடைய சொத்து எது என்பதை விளம்புகைபடுத்தாமலேயே செயலுறுத்துக் கட்டளை கோருவது தவறானதும், ஏற்புடையதும் அல்ல. இவ்வழக்கில் 2 எதிர்மனுதாரர்கள் மட்டுமே தரப்பினர்களாக இருக்கும் நிலையில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களை அளந்து கோவில் பெயருக்கு பட்டா வழங்க முயற்சி செய்வதாகவும், அவ்வாறு வழங்கினால் ஒரு குழப்பமான நிலை ஏற்பட்டு பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கிவிடும் என்று 03.04.2023ம் தேதி வருவாய்துறை அலுவலர்களுக்கும், சர்வேயருக்கும் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதில் வழக்கு முடியும் வரை எந்தவித பட்டா மாறுதலும் செய்யக்கூடாது என கோரிக்கை விடுத்ததாகவும், அதை அவர்கள் கண்டுணரவில்லை என்றும், 04.02.2023ம் தேதியில் செங்கல் மணலை கொண்டு வந்ததாகவும், எதிர்மனுதாரர்கள் வீட்டின் முன்புறம் காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டதால் மோட்டார் சைக்கிளிலோ, காரிலோ செல்ல முடியவில்லை என்றும், அதனை நீக்கம் செய்ய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வேண்டிய அவசியம் இருப்பதால் தாவாவை உரிய வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் கூறுவது தவறானதாகும்.

(ii) மனுதாரர்கள் கோரும் பரிகாரத்தால் வழக்குமூலம், வழக்கின் தன்மை அதன் நிலை அனைத்தும் மாறிவிடும். ஒரு புதிதான வழக்கையே உருவாக்கிவிடும். அவைகள் எவ்விதத்திலும் ஏற்கக்கூடியதல்ல. எவ்வித முதலேற்பும், முகாந்திரமும் ஏதும் கிடையாது. தற்போது நீதிமன்ற கட்டணம் நிரந்தர தடையாணைக்கு மதிப்பீடு

செய்யப்பட்டுள்ளது. ஆனால் திருத்தப்பட வேண்டிய பரிகாரமாக செயலுறுத்துக் கட்டளை கோரப்பட்டுள்ளது. ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் போது பரிகாரம் கோரும் நபரின் உரிமை, சுவாதீனம் ஆகியன உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு உறுதி செய்யப்படாத நிலையில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோருவது தவறாகும்.

(iii) மேலும் கோவில் சொத்தை பாதுகாக்க ஊர் பொதுமக்கள் கொடுத்த நன்கொடை அடிப்படையில் கட்டப்பட்ட சுற்றுசுவரை அகற்ற வேண்டும் என பரிகாரம் கோருவது முகாந்திரமற்றதும், சட்டவழியை தவறாக பயன்படுத்துவதும் ஆகும். மனுதாரர்களுடைய சட்டப்பூர்வமான உரிமை மற்றும் சுவாதீன நிலைப்பாடுகள் எதையும் தெரியப்படுத்தாமலும், அதற்கான ஆவணங்களை முன்னிலைப்படுத்தாமலும் இம்மனு தாக்கல் செய்திருப்பது சட்டவழியை தவறாக பயன்படுத்துவதே ஆகும். மனுதாரர்களின் மனு முதல் ஏற்பு நிலையில் இல்லாத ஒன்றாகும். மனுதாரர்களின் மனுவில் எந்த ஒரு சம நோக்கும், சம வாய்ப்பும் இல்லாத ஒன்றாகும். மனுதாரர்களின் மனுவால் எதிர்மனுதாரர்களுடைய உடைமைக்கும், உரிமைக்கும், அதன் அனுபவ நிலைக்கும், மிகுந்த மன உளைச்சலும், துன்பங்களும் ஏற்பட்டுள்ளது. எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் கடுமையான ஆட்சேனையை பொருட்படுத்தாது எதிர்மனுதாரர்களால் மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் வழியை அடைத்து சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்றும், சிறிதளவு வழியை மட்டுமே விட்டு,

எதிர்மனுதாரர்களால் மனுதாரர்களின் வீட்டிற்கு எதிரே மேற்படி சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளதால் மனுதாரர்களால் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் மூலம் அவர்களது வீட்டிற்கு செல்ல இயலவில்லை என்றும், மேற்படி சுவற்றை அகற்றாவிட்டால் மனுதாரர்களின் நலனுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும் என்பதால், அசல் வழக்கில் மேற்படி சுவற்றை நீக்க உத்தரவிட உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதியளிக்க கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கில் 2 எதிர்மனுதாரர்கள் மட்டுமே தரப்பினர்களாக இருக்கும் நிலையில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களை அளந்து கோவில் பெயருக்கு பட்டா வழங்க முயற்சி செய்வதாகவும், அவ்வாறு வழங்கினால் ஒரு குழப்பமான நிலை ஏற்பட்டு பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கிவிடும் என்று 03.04.2023ம் தேதி வருவாய்துறை அலுவலர்களுக்கும், சர்வேயருக்கும் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதில் வழக்கு முடியும் வரை எந்தவித பட்டா மாறுதலும் செய்யக்கூடாது என கோரிக்கை விடுத்ததாகவும், அதை அவர்கள் கண்டுணரவில்லை என்றும், 04.02.2023ம் தேதியில் செங்கல் மணலை கொண்டு வந்ததாகவும், எதிர்மனுதாரர்கள் வீட்டின் முன்புறம் காம்பவுண்ட் சுவர் கட்டிவிட்டதால் மோட்டார் சைக்கிளிலோ, காரிலோ செல்ல முடியவில்லை என்றும், அதனை நீக்கம் செய்ய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வேண்டிய அவசியம் இருப்பதால் தாவாவை உரிய வகையில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் கூறுவது தவறானது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) மேலும் மனுதாரர்கள் கோரும் பரிகாரத்தால் வழக்குமூலம், வழக்கின் தன்மை அதன் நிலை அனைத்தும் மாறிவிடும். ஒரு புதிதான வழக்கையே உருவாக்கிவிடும் என்றும், அவைகள் எவ்விதத்திலும் ஏற்கக்கூடியதல்ல என்றும், எவ்வித முதலேற்பும், முகாந்திரமும் ஏதும் கிடையாது என்றும், தற்போது நீதிமன்ற கட்டணம் நிரந்தர தடையாணைக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் திருத்தப்பட வேண்டிய பரிகாரமாக செயலுறுத்துக் கட்டளை கோரப்பட்டுள்ளது என்றும், ஒரு

செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் போது பரிகாரம் கோரும் நபரின் உரிமை, சுவாதீனம் ஆகியன உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு உறுதி செய்யப்படாத நிலையில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோருவது தவறு என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iv) மேலும் கோவில் சொத்தை பாதுகாக்க ஊர் பொதுமக்கள் கொடுத்த நன்கொடை அடிப்படையில் கட்டப்பட்ட சுற்றுசுவரை அகற்ற வேண்டும் என பரிகாரம் கோருவது முகாந்திரமற்றது என்றும், மனுதாரர்களுடைய சட்டப்பூர்வமான உரிமை மற்றும் சுவாதீன நிலைப்பாடுகள் எதையும் தெரியப்படுத்தாமலும், அதற்கான ஆவணங்களை முன்னிலைப்படுத்தாமலும் இம்மனு தாக்கல் செய்திருப்பது சட்டவழியை தவறாக பயன்படுத்துவது என்றும், மனுதாரர்களின் மனு முதல் ஏற்பு நிலையில் இல்லாத ஒன்று என்றும், மனுதாரர்களின் மனுவில் எந்த ஒரு சம நோக்கும், சம வாய்ப்பும் இல்லாத ஒன்று என்றும், மனுதாரர்களின் மனுவால் எதிர்மனுதாரர்களுடைய உடைமைக்கும், உரிமைக்கும், அதன் அனுபவ நிலைக்கும், மிகுந்த மன உளைச்சலும், துன்பங்களும் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளது தெரியவருகிறது.

(v) இவ்வழக்கின் சங்கதிகளை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள் /வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் இவ்வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் எதிர்மனுதாரர்களால் மனுதாரர்களின் வீட்டிற்கு எதிரில், மனுதாரர்கள் தங்களது வீட்டிற்குள் இயல்பாக சென்று வருவதை தடுக்கும் வகையில் சுவர் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் மனுதாரர்கள் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனத்திலோ தங்களது வீட்டிற்கு செல்ல இயலவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கிலேயே மொத்தம் இரண்டு எதிர்மனுதாரர்கள் மட்டுமே தரப்பினர்களாக உள்ள நிலையில், வருவாய் துறையினரை 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களாக குறிப்பிட்டு இம்மனு பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளது

குழப்பத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ளதை கருத்தில் கொள்கையில், மனு பிரமாணப்பத்திரிக்கையின் சாராம்சத்தை ஒருங்கே கருத்தில் கொள்கையில், தற்போது மனுதாரர்கள் இம்மனுவின் மூலம் பரிகாரப்பத்தியில் சேர்க்க கோரும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரமானது 1, 2 எதிர்மனுதாரர்களை பொறுத்து மட்டுமே என்பது தெளிவாகிறது.

(vi) எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் தாவா சொத்துக்களை அளந்து, வருவாய் துறையினர் கோவில் பெயருக்கு பட்டா வழங்க முயற்சிப்பதாக குறிப்பிட்டு, அவர்களை 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களாக மனு பிரமாணப்பத்திரிக்கை பத்தி 3ல், மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள நிலையில், மேலோட்டமாக பரிசீலனை செய்தால், அசல் வழக்கிலேயே வருவாய் துறையினர் தரப்பினராக இல்லாத நிலையில், இம்மனுவில் எவ்வாறு அவர்களை 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களாக குறிப்பிட இயலும் என்ற குழப்பம் எழுவது உண்மையே எனினும், உத்தேச திருத்தப்பாடுகள் மூலம் வழக்குரை பரிகாரப்பத்தியில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மட்டுமே மனுதாரர்கள் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோருவதால், மேற்படி வருவாய் துறையினர் மனு பிரமாணப்பத்திரிக்கையில் 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதாலேயே மனுதாரர்களது முழு கோரிக்கையும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக கருத இயலாது.

(vii) மேலும் அவ்வாறு வருவாய் துறையினரை 3 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களாக பெயரளவில் குறிப்பிடப்பட்டுள்ளதாலேயே மனுதாரர்களின் பிரதான கோரிக்கை பாதிக்கப்படுவதாகவோ, 1, 2 எதிர்மனுதாரர்களின் நலனுக்கு ஊறு விளைவதாகவோ, கூற இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அடுத்ததாக, இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் சங்கதி யாதெனில், எதிர்மனுதாரர்களே தங்களது எதிருரையில் கோவில் சொத்தை பாதுகாக்க வேண்டி ஊர்பொதுமக்கள், பக்தர்கள் கொடுத்த நன்கொடையின் அடிப்படையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டதாக தெரிவித்துள்ளனர். அவ்வாறு உள்ள நிலையில், இவ்வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், வழக்கிடை சொத்தில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

(viii) அதாவது தாவா சொத்துகளுக்கு செல்லும் தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்ய முயற்சிப்பதாகவும், அதனால் மனுதாரர்கள் தாவா சொத்துகளுக்கு செல்லும் தடவழிகளை தடுத்து, எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், வழக்கிடை சொத்தில் எதிர்மனுதாரர்கள் சுற்றுச்சுவர் அமைத்துள்ள நடவடிக்கைகள் ஆனது முந்தைய வழக்கு மூலத்தின் தொடர்ச்சியே ஆகும். ஆகையால் மனுதாரர்கள் கோரும் செயலுறுத்துகட்டளை பரிகாரத்தால் வழக்குமூலம், வழக்கின் தன்மை, அதன் நிலை அனைத்தும் மாறிவிடும் எனவும், புதிய வழக்கே உருவாகிவிடும் எனவும், எதிர்மனுதாரர்கள் முன்வைக்கும் எதிர்வாதம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(ix) அடுத்ததாக, தாவா சொத்தானது கோவிலுக்காக 36 நபர்கள் மீது பொதுக்கிரயம் பெறப்பட்டு, கோவில் நிர்வாகத்தின் கீழ் இருந்துவரும் நிலையில், உரிமை விளம்புகை பரிகாரம் கோராமல் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோருவதை கருத்தில் கொள்கையில், இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் எழுவினாக்களை வனையப்படாமல் உள்ள நிலையில், வாதிகள் தாவா சொத்தின் பேரிலான தங்களது உரிமை மூலத்தை நிரூபிக்க வேண்டுமா? என்பது குறித்து வழக்கு விசாரணையின் அடிப்படையில் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அவ்வாறு ஒருவேளை தாவா சொத்துகளின் பேரில் மனுதாரர்களுக்குள்ள உரிமை மூலம் குறித்து இந்நீதிமன்றத்திற்கு ஐயப்பாடு எழும்பட்சத்தில், அது குறித்து நிரூபிக்க வேண்டிய நிரூபண சுமையானது முழுவதும் மனுதாரர்களையே சார்ந்தது என்பதால், தற்போதைய சூழ்நிலையில் மனுதாரர்கள் தங்களது வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோருவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழலும் ஏற்பட வாய்ப்பில்லை எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) இவ்வழக்கில் வழக்கு விசாரணை தொடங்கப்படாத நிலையிலும், மேலும் மேற்படி திருத்தப்பாடுகள் தொடர்பாக, கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய எதிர்மனுதாரர்களுக்கு

வாய்ப்புள்ள நிலையிலும், மேற்படி திருத்தப்பாடுகள் சம்மந்தமாக மனுதாரர்களை வழக்கு விசாரணையின்போது குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு உள்ளதை கருத்தில் கொள்கையிலும், வழக்குரையில் திருத்தம் செய்ய உத்தேசித்திருக்கும் சங்கதிகளுக்கு எதிராக ஆவணங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்களை முன்னிலைப்படுத்த எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்புள்ளதை கருத்தில் கொண்டு, மனுதாரர்கள் கோரும் திருத்தங்கள் அனுமதிக்கத்தக்கது என்றும், மேற்படி திருத்தங்களை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், நீதியின் நலனையும் கருத்தில் கொள்கையில், மனுவில் கோரியுள்ள திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, செலவுத்தொகையின்றி இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.07.15 17:35:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– </u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.07.15 17:36:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.